CA | THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# SUGGESTED SOLUTIONS

NOT FOR SALE

## KE3(B)-Fundamentals of Law

**March 2017**

All Rights Reserved

## பிரிவு 01

**விடை 01**

1.1

கற்கை வெளிப்பாடுகள்: 1.3.1
இலங்கையிலுள்ள நீதிமன்றங்களையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் இனங்காணல்.

**சரியான விடை: C**

1.2

கற்கை வெளிப்பாடுகள் : 2.1.1
வலிதான ஒப்பந்தமொன்றின் தேவைப்பாடுகளை விபரித்தல். அதாவது கொடைமுனைவு, ஏற்பு, சட்ட ரீதியான தொடர்பு முறையினை ஏற்படுத்துவதற்கான நாட்டம், ( ":LaesioEnormis" கோட்பாடு உட்பட), தகைமை மற்றும் வடிவம். ஒப்பந்தஉடன்படிக்கை,கொடைமுனைவு, மற்றும் ஏற்பு, ஒப்பந்தம் செய்வதற்கு தேவையான தகைமைகள், ஒப்பந்தங்களின் வடிவங்கள், இணக்கப்பாட்டின் யதார்த்தம் ஆகியவற்றின் பொருள்வரையறைகள்.

**சரியான விடை : B**

1.3

கற்கை வெளிப்பாடுகள் : 3.5.1
குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு ஒப்பந்தம் ஆகியவற்றின் தத்துவங்களை குறிப்பிடுதல்.

**சரியான விடை : C**

1.4

கற்கை வெளிப்பாடுகள் : 4.1.2
வியாபாரக் கண்ணோட்டத்தில் காசோலைகள், மாற்றுண்டியல்கள், சத்தியக் குறிப்புகள் ஆகியவற்றின் தொழிற்பாடுகளை விபரித்தல்.

**சரியான விடை : D**

1.5

கற்கை வெளிப்பாடுகள் : 4.3.1
மாற்றுண்டியல்கள் தொடர்பில் உரியகாலக் கொள்ளுனர் holder in due course) மற்றும் சமர்ப்பித்தல் (presentment) ஆகியவற்றின் வர்த்தக முக்கியத்துவத்தினை பொருள்வரையறை செய்து விபரித்தல்.

**சரியான விடை : B**

1.6

கற்கை வெளிப்பாடுகள் : 5.3.2
முகவருக்கான முதல்வரின் கடமைகளை குறிப்பிடுதல்.

**சரியான விடை : D**

1.7

கற்கை வெளிப்பாடுகள்s: 5.7
பங்காளர்கள் பங்குடமைத் தொடர்பினை ஏற்படுத்துதல், பங்காளர்களில் மாற்றம் மற்றும் பங்குடமைக் கலைப்பு.

**சரியான விடை : D**

NOT FOR SALE

1.8

| |
|---|
| கற்கை வெளிப்பாடுகள் :<br>7.3.2 தொழில் மணித்தியாலம், வாராந்த, வருடாந்த விடுமுறைகள் மற்றும் லீவுகளை குறிப்பிடுதல்.<br>7.3.3 கடை மற்றும் அலுவலக சட்டத்தின் கீழ் தொழில்தருனர் வழங்கவேண்டிய வசதிகளை இனங்காணல். |
| **சரியான விடை : B** |

1.9

| |
|---|
| கற்கை வெளிப்பாடுகள் :<br>7.1.1 ஊழியர் சேமலாப நிதியம் (EPF)<br>ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF)<br>தனியார் சேமலாப நிதியம் (PPF)<br>7.1.3 ஊழியர்கள் தமது EPF & ETF பங்களிப்பினை மீளப்பெறக்கூடிய சந்தர்ப்பங்களை நிரற்படுத்துதல். |
| **சரியான விடை : B** |

1.10

| |
|---|
| கற்கை வெளிப்பாடுகள ; 8.2.1<br>கீழ்வரும் சட்டங்கள் ஒவ்வொன்றினையும் சுருக்கமாக குறிப்பிடுதல்:<br>2006 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க பணச்சலவைத் தடைச் சட்டம்; 2006 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க மின்னியல் ஊடுசெயல்கள் சட்டம்; கணனிக் குற்றச் சட்டம்; நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்; 2003 ஆம் ஆண்டு 36 ஆம் இலக்க புலமை ஆதனச் சட்டம். |
| **சரியான விடை : C** |

**(2 x 10 = மொத்தம் 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பிரிவு 2

**விடை 02**

2.1

கற்கை வெளிப்பாடுகள்: 1.4.1

கீழே தரப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்தினதும் ஒழுங்குபடுத்தல் வகிபாத்திரத்தை விபரித்தல்: இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம், இலங்கை கணக்கட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை, காப்பாவணங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு, கொழும்பு பங்குப் பரிமாற்று நிலையம், முதலீட்டுச் சபை, கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், சுங்கத் திணைக்களம், மத்திய வங்கி (நாணயமாற்றுக் கட்டுப்பாட்டு விடயங்கள்).

- பிரயோகக் கட்டத்திலிருந்து வர்த்தக தொழிற்பாடுவரை சகல கட்டங்களிலும் முதலீட்டாளருக்கு உதவுதல்.
- ஏற்றுமதி வர்த்தக வலயங்களை தாபித்தல் மற்றும் முகாமை செய்தல் முதலீட்டுச் சபையிடம் (BOI) ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இவை, கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி நிறுவனங்களை தாபிப்பதற்கு முதலீட்டாளருக்கு கிடைக்கின்றது).
- அந்நிய நாணய உழைப்பு மூலங்களை பல்துறைப்படுத்த உதவுகின்றது.
- ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு.
- அந்நிய நேரடி முதலீடுகள் மற்றும் உள்நாட்டு முதலீடுகளை கவருவதற்கு

2.2

கற்கை வெளிப்பாடுகள்: 2.5.1

ஒப்பந்த முறிவுக்கு பொதுச் சட்ட மற்றும் நியாயமான (equitable) நிவாரணங்களை விபரித்தல். .

- மேலும் செயற்படுவதற்கு மறுத்தல்
- நட்டஈடு கோருதல்
- மேற்கொண்ட அளவுக்காக (quantum merit) வழக்குத் தொடர்தல்.
- குறிப்பிட்ட செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி வழக்குத் தொடர்தல்..
- இடைக்கால தடையுத்தரவு கோரி வழக்குத் தாக்கல் செய்தல்..
- நீதியற்ற பயனடைதற் கோட்பாட்டின் கீழ் நிவாரணம் எதிர்பார்த்தல்.

2.3

கற்கை வெளிப்பாடுகள்: 3.1.1

பொருட்கள் விற்பனைக்கான ஒப்பந்தம் மற்றும் வேலை மற்றும் மூலப்பொருட்களுக்கான ஒப்பந்தம் ஆகிய இரண்டிற்கும் இடையிலான வேறுபாடு மற்றும் குறிப்பிட்ட பொருட்களின் வகைப்படுத்தல் ஆகியவற்றினை ஆராய்தல்.

விற்பனை ஒப்பந்தமானது அசையும் சொத்துக்களின் அல்லது பொருட்களின் வினியோகம் சம்பந்தப்பட்டதாகும்.

**வேலைகள் அல்லது மூலப்பொருட்களுக்கான ஒப்பந்தம்** என்பது, திறமையை பிரயோகிப்பதற்கான ஒப்பந்தமாகும். இங்கு அசையும் சொத்து / பொருட்களின் வினியோகம் இரண்டாம் பட்சமாகும்.

NOT FOR SALE

2.4

| |
|---|
| கற்கை வெளிப்பாடுகள்: 7.4.1<br>தொழிலாளர் தொழில் முடிவுக்குக் கொண்டுவரல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தொழிலாளர் சேவையை முடிவுக்குக் கொண்டுவருதலில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை விபரித்தல். |
| முதலாவதாக தொழிலாளியின் எழுத்துமூலமான முன்சம்மதம் பெறப்படுதல் வேண்டும்.<br>அல்லது;<br>அதன் பின்னர் தொழில் ஆணையாளரின் எழுத்துமூரமான முன்அனுமதி பெறப்படல் வேண்டும். |

2.5

| |
|---|
| கற்கை வெளிப்பாடுகள்: 8.1.1<br>மோசடி, திருட்டு பணச்சலவை, இலஞ்சம், கவனவீனம் ஆகிய பதங்களை பொருள்வரையறை செய்து, பிரதான பிரதிவாதங்களை விபரித்தல். |
| திருட்டுக் குற்றத்திற்கு பிரதான பிரதிவாதம் கீழ்வரமாறு:<br><br>- ஆதனத்தின் சொத்துரிமையை கோருதல் - அதாவது, குற்றம் சாட்டப்பட்டவர் நன்நம்பிக்கை அடிப்படையில் ஆதனம் தமக்குச் சொந்தமானதென நம்புதல்.<br>- போதைக்கு ஆட்படுதல் (Intoxication) – மது, இரசாயனம் அல்லது போதைப் பொருட்களால் தூண்டப்பட்டதென்றும் அவருக்கு திருடும் எண்ணம் இருக்கவில்லையெனவும் சாதித்தல்.<br>- சிக்கவைத்தல்- அதாவது, குற்றமிழைத்தவர் இன்னொருவரால் திருடுவதற்கு தூண்டப்படுதல் அல்லது ஆசைகாட்டுதல்.<br>- பொருளை திருப்பி ஒப்படைக்கும் நோக்கம் – குற்றமிழைத்தவர் தான் திருடவில்லை எனவும், உரிமையாளருக்கு திருப்பிக் கொடுக்கும் எண்ணத்துடன், கடன்பட்டதாகவும் ஒப்புவித்தல் வேண்டும். |

**(2 x 5= மொத்தம் 10 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பிரிவு 3

**விடை 03**

| கற்கை வெளிப்பாடுகள்: 2.2.1 |
|---|
| ஒப்பந்த கட்டுறுப்புக்கள் என்பதனால் கருதப்படுவது என்ன (நிபந்தனைகள், உத்தரவாதங்கள்,விதிவிலக்குச் சரத்துக்கள்) மற்றும் விதிவிலக்குச் சரத்துக்களின் தாக்கம் மற்றும் 1997 ஆண்டின் 26 ஆம் இலக்க நியாயமற்ற ஒப்பந்த கட்டுறுப்புக்கள் சட்டம் ஆகியவற்றினை விபரித்தல். |

**பகுதி (a) :**

**நிபந்தனை** என்பது ஒப்பந்தத்தின் மூலவேரை அல்லது அத்திவாரத்தை தாக்கக்கூடிய கட்டுறுப்பாகும்.

ஒரு நிபந்தனை முறிவானது, குற்றமற்ற தரப்பினருக்கு ஒப்பந்தத்தினை இரத்துச் செய்யவும் அத்துடன், இழப்பீட்டினை கோரவும் உரிமையை தருகின்றது.

உத்தரவாதம் (**warranty**) என்பது, செய்யப்பட வேண்டிய ஒன்றாக இருப்பினும், அதை மேற்கொள்ளத் தவறுதல் ஒப்பந்தத்தின் அடிப்படையினை தாக்கும் அளவுக்கு முக்கியமானது அல்ல.

ஒரு உத்தரவாத முறிவானது குற்றமற்ற தரப்பினர் ஒப்பந்தத்தினை இரத்துச் செய்ய அனுமதிக்காது. (1/2 mark), ஆனால் இழப்பீடு கோருவதற்கு அனுமதிக்கும்.

**பகுதி (b) :**

“அடிப்படை அம்சம்” எனும் சொற்பிரயோகத்தின் கீழ் கூறப்படும் சரத்து ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாக கொள்ளவேண்டும் என ஒப்பந்தத் தரப்பினரின் நோக்கத்தை தெளிவாகக் காட்டுகின்றது.

எனவே, தவணைக்கட்டண கொடுப்பனவை தாமதப்படுத்தியது மூவி மேற்கொண்ட நிபந்தனை முறிவாக கொள்ளப்படும்.

எனவே, கணனிகளின் உரிமையாளரான சுவி, ஒப்பந்தத்தினை மறுதலிக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமையையும் அத்துடன், ஒப்பந்தத்தின் கீழ் வாடகைக்கு வழங்கிய கணனிகளை மீளப் பெறுவதுடன் ஒப்பந்த மீறலுக்காக இழப்பீடு கோரும் உரிமையையும் கொண்டுள்ளார்.

இதனை ஒத்த விடயங்கள் ***Lombard North Central PLC v Buttersworth [1987] Q.B. 527*** வழக்கில் ஆராயப்பட்டுள்ளது.

**[மொத்தம் = 10 புள்ளிகள்]**

NOT FOR SALE

**விடை 04**

**பகுதி (a)**

| கற்கை வெளிப்பாடுகள்: 3.3.1 |
|---|
| இடர் கடத்தப்பட்டு உடமை மாற்றப்படும் தருணத்தினை ஆராய்தல் (இனங்கண்டு தீர்மானிக்கப்படாத பொருட்கள், உடமையின் ஒதுக்கம், தவணைக்கட்டண வினியோகம், ஏலம் மூலமான விற்பனை, உரிமையாளர் அல்லாத ஒருவரினால் விற்பனை). |

தரப்பட்ட சந்தர்ப்பத்தில் 15 மூட்டைகளும் ஆரம்பத்தில் விபரித்தலின் மூலம் பொருள்வரையறை செய்யப்பட்டனவே தவிர ஒப்பந்தத்தில் இனங்காணப்பட்டு ஒதுக்கப்பட்டவை அல்ல.

இனங்காணப்படாத பொருட்களின் விபரித்தல் மூலமான விற்பனை ஒப்பந்தம் தொடர்புபட்ட சட்டத்தின்படி விபரிக்கப்பட்ட பொருள் வினியோகிக்கக்கூடிய நிலையிலிருப்பின், அந்தப் பொருட்கள் எந்தவொரு ஒப்பந்தத் தரப்பினராலும் நிபந்தனையற்று ஒப்பந்தத்திற்கு ஒதுக்கப்படும்போது, அந்தப் பொருட்கள் மீதான உடமை வாங்குனருக்கு அவடவாறு ஒதுக்கப்படும்போது கடத்தப்படும்.

தரப்பட்ட சந்தர்ப்பத்தில், கில்பேர்ட் ஏற்கனவே 15 மூட்டைகளையும் ஒப்பந்தத்திற்கு ஒதுக்கியுள்ளார். இந்த ஒதுக்கத்திற்கு பண்டுவின் சம்மதம் அவரின் பிரதிபலிப்பு நடத்தையின் மூலம் அவர் மறுப்பு தெரிவிக்காததால் தெரியவருகின்றது..

எனவே, 15 மூட்டைகள் மீதான உடமை ஒதுக்கம் மேற்கொண்டபோதே பண்டுவிற்கு கடத்தப்பட்டது.

மேற்படி உண்மைகளின் அடிப்படையில், 15 மூட்டைகளுக்கு செலுத்திய விலையினை கில்பேர்டிடம் இருந்து கோரும் பண்டுவின் முயற்சி வெற்றியளிக்கப் போவதில்லை.

இந்தத் தருநிலையானது தீர்மானிக்கப்பட்ட வழக்கான Pignataro vs Gilroy [1919] K.B.459 இற்கு ஒப்பானது

**பகுதி (b)**

| கற்கை வெளிப்பாடுகள்: 5.2.1 |
|---|
| எஏத்தகைய சந்தர்ப்பங்களில் முகவர் உண்மை அதிகாரத்தினை பெறக்கூடும் என்பதையும் (வெளிப்படை அதிகாரம் மற்றும் உட்கிடையான அதிகாரம்) போலி அதிகாரத்தையும் (ostensible authority) விபரித்தல். |

கம்பனிச் செயலாளர் அலோமா, கம்பனி அலுவலர் ஆதலால், முகவரும் ஆவார்.

தரப்பட்ட சந்தர்ப்பத்தில் தளபாடங்களை வாடகைக்கு எடுப்பதற்கு உண்மையான அதிகாரம் அவருக்கு வழங்கப்படாத போதிலும், கம்பனியின் செயலாளர் என்ற ரீதியில் அவர் தளபாட வாடகைக் கம்பனியில் அத்தகைய அதிகாரத்தினை கொண்டிருப்பார் எனும் தோற்றப்பாட்டை அல்லது எண்ணத்தை தருகின்றது. இந்த வகையான அதிகாரம் போலி (ostensible) அல்லது தோற்ற (apparent) அதிகாரம் எனப்படும்.

எனவே, கம்பனி அலுவலரான அலோமா கம்பனி சார்பாக தளபாட வாடகை ஒப்பந்தத்தினை ஏற்படுத்துவதற்கு தோற்ற அல்லது போலி அரிகாரத்தினை கொண்டுள்ளார்.

எனவே, தளபாட வாடகையினை செலுத்த வேண்டிய பரிப்பினை கம்பனி கொண்டுள்ளது.

இதனை ஒத்த சம்பவம் பிரசித்த வழக்கான Panorama Developments vs. Fidelis Furnishing Fabrics (1971) 2 Q.B. 711இல் இடம்பெற்றது.இங்கு கம்பனிச் செயலாளர் தமது தனிப்பட்ட பாவனைக்கு வாடகைக்கு பெற்ற கார்களின் வாடகைக்கு கம்பனி பொறுப்பானது.

**[மொத்தம் = 10 புள்ளிகள்]**

## பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ளு அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

---

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.

---

NOT FOR SALE